பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 26 வியாழக்கிழமை 11.01.2024 அதிர்வு 164

## இரு நாள்களில் 10 பேர் மாயம்!

நாட்டில் கடந்த இரு நாள்களில் இரண்டு வயது சிறுமி மற்றும் பாடசாலை மாணவி உட்பட 10 பேர் காணாமல்போயுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதன்படி காணாமல்போன 04▸





# மூன்று வேட்பாளர்களுக்குள்ளும் இணக்கப்பாடு எதுவும் இல்லை!

## தமிழரசின் தலைமைக்குப் போட்டி உறுதி

## திருமலையில் 21 ஆம் திகதி வாக்கெடுப்பு



*- சீ.ஏ.தமிழ்மாறன் -*

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் 3 வேட்பாளர்களும் விட்டுக் கொடுப்புக்குத் தயாராக இருக்காததால், எதிர்வரும் 21 ஆம் திகதி புதிய தலைவருக்கான வாக்கெடுப்பு திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக தலைவர் பதவிக்காக விண்ணப்பித்த நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் ஆகிய மூவரும் இன்று முற்பகல் 10.45 மணிக்கு மாதிவெலவிலுள்ள சிறிதரன் எம்.பியின் விடுதியில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். 04▸

# கொழும்பில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டு சுட்டுப் படுகொலை

கொழும்பு, நவகமுவ பகுதியில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம், தெரியாத இருவரே துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்புப் பணியாளர்கள் போன்று வேடம் தரித்த சந்தேக நபர்கள், உயிரிழந்த நபரின் வீட்டுக்கு நேற்று இரவு சென்றுள்ளனர்.

அதன்பின்னர், மேற்படி நபரை அப்பகுதியிலுள்ள வயலுக்குக் கடத்திச் சென்று துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் கூறினர். 04▸





# மண்டைதீவு பொலிஸ் காவலரண் மீது பெற்றோல் குண்டு வீச்சுத் தாக்குதல்!

## இருவர் மடக்கிப் பிடிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் - மண்டைதீவு பொலிஸ் காவலரண் மீது பெற்றோல் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று இரவு மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தவர்களால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், பெற்றோல் போத்தல் வீதியில் வீழ்ந்து வெடித்துள்ளதால் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்ற இருவரைப் பொலிஸார் துரத்திச் சென்று பிடித்தனர்.

மண்டைதீவு மற்றும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர் என்றும், இருவரும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தையும், தீவகத்தையும் இணைக்கும் மண்டைதீவு சந்தியில் பொலிஸ் காவலரண் காணப்படுவதால் தீவகப் பகுதிகளில் இருந்து சட்டவிரோத இறைச்சிகள், போதைப் பொருட்கள் என்பவற்றை யாழ்ப்பாணத்துக்குக் கடத்தப்படுவது பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சுவர் இடிந்து வீழ்ந்து இளம் தாய் மரணம்!

## தந்தையும், ஒன்றரை வயது குழந்தையும் படுகாயம்

வீடொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் 23 வயதுடைய இளம் தாய் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை, ஹிங்குராங்கொடை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் அவரது கணவரும் ஒன்றரை வயது குழந்தையும் படுகாயமடைந்த நிலையில் பொலன்னறுவை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக குறித்த வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்துள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.




### பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

# வவுனியா வைத்தியசாலை சிற்றூழியர்கள் போராட்டம்

(கி.வசந்தரூபன்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள் பல்வேறு கோரிக்கைளை முன்வைத்து கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலை நுழைவாயில் முன்பாக இன்று காலை 10 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பள அதிகரிப்பு , ஊழியர் பற்றாக்குறையை உடன் நிவர்த்தி செய், வாழ்வாதாரத்தை அதிகரி போன்ற கோரிக்கைகளை முன்வைத்து 30 நிமிடங்கள் அமைதியான முறையில் இந்தப் போராட்டத்தைச் சிற்றூழியர்கள் முன்னெடுத்தனர்.

வைத்தியசாலை சிற்றூழியர்கள் சுகயீன விடுமுறை வழங்கி கடமையிலிருந்து விலகி இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.













# அயலக தமிழர் தின தொடக்க விழா





சென்னையில், தமிழக அரசால் நடத்தப்படும் "அயலகத் தமிழர் தினம் 2024" தொடக்க விழாவில் தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. மற்றும் துறைசார் அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்துகொண்ட போது...

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மூன்று வேட்பாளர்களுக்குள்ளும்...

எனினும், இந்தக் கலந்துரையாடலில் கட்சியின் புதிய தலைவரைப் போட்டியின்றி தெரிவு செய்ய வேண்டும் என்ற அரசியல் குழுவின் தீர்மானம் தோல்வியடைந்தது. 3 வேட்பாளர்களும் விட்டுக் கொடுப்புக்குத் தயாராக இருக்கவில்லை.

மேற்படி சந்திப்பில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்பதால், திட்டமிட்டபடி எதிர்வரும் 21ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறும் பொதுக் குழுக் கூட்டத்தில் ஜனநாய முறையிலான இரகசிய வாக்கெடுப்பு மூலம் தமிழரசுக் கட்சிக்கான தலைவர் தெரிவு நடைபெறவுள்ளது.

"நாம் மூவரும் யார் தலைவர் என்று தீர்மானிப்பதைவிட கட்சியின் உறுப்பினர்களே யார் தலைவர் என முடிவு எடுப்பதே சாலச் சிறந்தது. எனவே, எதிர்வரும் 21ஆம் திகதி திட்டமிட்டபடி வாக்கெடுப்பு நடைபெறும்." – என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

"தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரைப் போட்டியின்றி தெரிவு செய்வதற்காக மூன்று வேட்பாளர்களும் தமக்குள் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுக்க ஒரு நாள் அவகாசம் கட்சியின் அரசியல் குழுவால் நேற்று வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய நாம் மூவரும் இன்று சந்தித்துப் பேசினோம். எனினும், இந்தச் சந்திப்பில் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை. எனவே, வாக்கெடுப்பே ஒரே வழி." – என்று தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான சி.சிறிதரன் கூறினார்.

தலைவர் பதவிக்குப் போட்டியிடும் மற்றைய வேட்பாளரான சீ.யோகேஸ்வரனிடம் அவரின் கருத்து தொடர்பில் கேட்பதற்குப் பல தடவைகள் முயன்றோம். எனினும், அவர் தொலைபேசி அழைப்புகளுக்குப் பதில் அளிக்கவில்லை.

### கொழும்பில்...

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர், சிகிச்சைகளுக்காக அத்துருகிரிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை உயிரிழந்தார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

நவகமுவ, வெலிபில்லேவ பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தார்.

### இரு நாட்களில்...

இரண்டு வயது சிறுமி வெலிபன்ன பத்தினியாகொட பகுதியைச் சேர்ந்தவராவார். மேற்படி சிறுமியும், முப்பது வயதுடைய அவரது தாயாரும் கடந்த 9ஆம் திகதி முதல் காணாமல்போயுள்ளனர் என்று பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அந்தப் பெண் யூடியூப் சனல் ஒன்றை நடத்தி வந்தவர் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரை நேற்று முதல் காணவில்லை என உறவினர்கள் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அத்தோடு வரக்காபொல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய நபர், மொரட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய பெண், முல்லேரியா பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய ஒருவர், தெகிவளையைச் சேர்ந்த 31 வயதுடைய பெண், தம்பகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் மற்றும் காரைதீவு பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய ஒருவரும் காணாமல்போயுள்ளனர்.

மேலும், மெதகம பிரதேசத்தில் வசிக்கும் 40 வயதுடைய ஒருவரும் காணாமல்போயுள்ளதுடன், அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பயங்கரவாதச் செயல் நிரூபிக்கப்பட்டால்

# 20 ஆண்டுகள் கடூழியச் சிறை; ஒரு மில்லியன் ரூபா அபராதம்!



பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவரின் குற்றம் நிரூபிக்கப்பட்டால், இருபது ஆண்டுகள் வரையிலான கடூழிய சிறைத் தண்டனை மற்றும் ஒரு மில்லியன் ரூபா வரை அபராதமும் விதிக்கப்படும்.

இலங்கையின் நாடாளுமன்றில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, நெடுஞ்சாலையிலோ அல்லது பொது இடத்திலோ மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்துடன் தொடர்புடைய குற்றத்துக்காக மேல் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கருதப்படும் ஒருவருக்கு இந்தத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் மாத்திரமன்றி விமானம் அல்லது கப்பலில் மேற்கொள்ளப்படும் குற்றங்கள் தொடர்பிலும் சட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்த யோசனையின்படி, கொலை, காயம், பணயக் கைதிகள் அல்லது கடத்தல் ஆகியவையும் குற்றமாகுமாகவே கருதப்படும்.

பொது அல்லது தனியார் சொத்துக்களுக்கு கடுமையான சேதம் விளைவிப்பது, பொது மக்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்புக்குக் கடுமையான ஆபத்தை உருவாக்குவது மற்றும் எந்தவொரு மத அல்லது கலாசார சொத்துக்களையும் அழிப்பது அல்லது தீவிரமாக சேதப்படுத்துவது ஆகியவையும் குற்றமாகும்.

அத்துடன் இந்தச் சட்ட மூலத்தின்படி, கொலைக் குற்றத்துக்காக மேல் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒருவருக்கு ஆயுள் தண்டனை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஷ ராஜபக்ஷ இந்தச் சட்ட மூலத்தை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.



# சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது ஞானாக்காவுக்கான பாதுகாப்பு!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆன்மீக ஆலோசகரான அநுராதபுரத்தை சேர்ந்த ஞானக்கா கண்டிக்கு வந்த போது, வழங்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

விசேட பிரமுகரை போன்று ஞானக்காவை வரவேற்க விசேட பொலிஸ் பாதுகாப்பு மற்றும் வாகன பேரணி வழங்கப்பட்டுள்ளது.

அவர் நேற்று முன்தினம் கண்டிக்கு வந்து பொலிஸ் பாதுகாப்பில் பயணம் மேற்கொண்டுள்ளார். அவருக்கு மதிய உணவை அவரது விசுவாசி என கூறப்படும் தியவதன நிலமே தயார் செய்துள்ளார்.

இந்த நிலையில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வீட்டில் அவர் தங்கியுள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் அது பொய்யான செய்தி என கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமீல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# ஐஸ் போதைப் பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!



திருகோணமலையை சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் 50 கிராம் ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சோதனையின் போதே நேற்றிரவு (10) அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் கான்ஸ்டபிள், மன்னாரில் இருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த வேளையில், யுக்திய திட்டத்துக்கு அமைவாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து வில்கம் விகாரை பகுதியில் வைத்து சோதனையிடப்பட்டுள்ளார்.

இதன்போது, அவரிடம் இருந்து 50 கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் திருகோணமலை – உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது கானல் நீர்

இலங்கை விடயத்தைக் கையாளும் இந்திய ராஜதந்திர தரப்புகளும், அவர்களின் பின்னால் ஊதுகுழல்களாக அலையும் தமிழர் தலைவர்களும் ஒரு சில விடயங்களை இந்தக் கட்டத்திலாவது சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

தங்கள் தாயகத்தின் இருப்புக்காகவும், பிறப்புரிமை விடயங்களுக்காகவும், சுதந்திரமான - கௌரவமான - வாழ்வுக்காகவும் தென்னிலங்கை அரசுடன் போராடப் புறப்பட்ட தமிழர் தரப்புகளும் அதற்காக இந்தியாவை நம்பி மோசம் போனமை குறித்து இப்போதாவது சிந்திக்க வேண்டும். அதற்கான வரலாற்றுச் சூழ்நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் ஈழத் தமிழர்களின் நிம்மதியான வாழ்வுக்கு என்ற வெளிப்பகட்டுடன் இந்தியா இலங்கையுடன் சேர்ந்து முன்வைத்து, நம் தலை மீது வலுக்கட்டாயமாக திணிக்க முயன்ற 13 ஆவது திருத்தமும், மாகாண சபை முறைமையும் எவ்வளவு தூரம் பலவீனமானவை என்பதையும், அதை நேரத்துடன் புரிந்து கொண்டு ஆரம்பத்தில் இருந்தே அதனை உறுதியாக எதிர்த்த விடுதலைப் புலிகளின் கருத்து நிலைப்பாடு எத்தகைய தீர்க்கதரிசனமானது என்பதையும், இப்போது கூட தமிழர் தரப்புகள் - குறிப்பாக தமிழர் தலைமைகள் - புரிந்து கொள்ளாமல் இருக்கின்றன. தனிப்பட்ட சுய நலன்களுக்காக இந்திய ஜால்ரா போடுவது எவ்வளவு தூரம் நியாயமானது, தம் இனத்திற்கு எதிரான மோசமான செயல் என்பதை இச்சமயத்திலாவது அத்தரப்புகள் புரிந்து கொள்ள முயல வேண்டும்.

முதலாவது விடயம் - இலங்கை, இந்திய ஒப்பந்தமே தமிழர்களின் முழுமையான அபிலாசைகளைப் புரிந்து கொண்டு அவற்றை முழுமையாக உள்வாங்கி தயாரிக்கப்பட்டதேயல்ல. இலங்கை மீதான தனது ஆதிக்கத்தை - பிடியை - செல்வாக்கை - நிலை நிறுத்துவதற்காக மட்டுமே ஈழத் தமிழரின் நலன் காக்கும் நடவடிக்கை என்ற பெயரில் புதுடில்லி முன்னெடுத்த திருகுதாளச் செயற்பாடே அது.

அடுத்து - இலங்கை, இந்தியா ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்ட அம்சங்களுக்கும் கூட முழு வடிவம் கொடுக்காத அரைகுறை அவியலே 13 ஆவது அரசமைப்பு திருத்தம்.

அதற்கடுத்து - அந்த 13 ஆவது திருத்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இலங்கையின் அரசமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அதிகார பரவலாக்கல் இந்த அரசமைப்புத் திருத்தம் நடைமுறைக்கு வந்து 35 ஆண்டுகள் கழிந்தும் செயல்முறைக்கு வரவில்லை.

அதற்கு அடுத்து - அப்படி நடைமுறைப் படுத்தப்பட்ட மிச்ச, சொச்ச ஏற்பாடுகளுடனான மாகாண சபை முறைமையே நாட்டில் கடந்த ஐந்து வருடங்களாக நடைமுறையில் இல்லை. இனி அது எப்போது வரும், எப்போதாவது வருமா, வந்தும் திரும்பிப் போய்விடுமா என்றெல்லாம் கூற முடியாத - தோன்றி மறையும் மின்மினிப் பூச்சி வடிவத்திலான - அர்த்தமற்ற - முறையாகவே 13 ஆவது திருத்தமாக இவ்விடயம் தரப்பட்டுள்ளது என்பது அனுபவப் பாடமாக - பட்டறிவாக - நமக்கு உணர்த்தப்பட்டுள்ளது.

இந்தக் கானல் நீரைத் தேடித்தான் இந்தியாவுக்கு பின்னால் நம்மவர்கள் - தமிழ் தலைவர்கள் - ஓடிக் கொண்டிருக்கிறார்கள். பெற்றுத் தந்ததையே சரியாக நிலை நிறுத்தச் செய்யும் உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க இயலாத தரப்பாகத்தான் இந்தியா உள்ளது. அத்தகைய புதுடில்லி தமிழர்களான நமக்கு பலமான - உறுதியான - வளமான - தீர்வுக் கட்டமைப்பு ஒன்றைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையில் இனியும் இந்தியாவுக்கு பின்னால் நம் தலைவர்களும் ஊதுகுழல்களும் ஓடிக்கொண்டிருப்பது முட்டாள்தனத்திலும் முட்டாள்தனம்.

அரசமைப்பில் அங்கீகரித்து சேர்த்துக் கொள்ளப்பட்ட அடிப்படை அதிகாரப்பர்வு விடயங்களையே நடைமுறைப்படுத்தாமல் விட்டு விட்டு எகத்தாளமிடும் நிலையில் கொழும்பு உள்ளது. அதிகாரப் பகிர்வுக்காக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையே - மாகாண சபைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிகள் மூலம் நிர்வகிக்கும் முறைமையையே கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக இல்லாமல் செய்து, அப்படி நிரந்தரமான நிலைமையை தொடர செய்யும் தெளிவிலும் உறுதியிலும் கூட கொழும்பு வெளிப்படையாக இருக்கின்றது.

இவை தொடர்பில் எந்தப் பயனுள்ள - காத்திரமான - நடவடிக்கை எடுப்பதற்கும் வக்கற்ற புதுடில்லி, அவ்வப்போது இலங்கை வந்து, தமிழ் தலைவர்களைப் பார்த்து 'ஒற்றுமையாக இருங்கள்!' என்று தத்துவம் பேசி, உபதேசம் பண்ணி, இவ்விடயத்தில் கொழும்பை நீதி நியாயத்தின்பால் நெறிப்படுத்த முடியாத தனது இயலாமையை மூடி மறைத்து,செல்லும். அதைப் புரியாமல் இன்னும் புதுடெல்லிக்குப் பின்னால் நம்பி அலைகின்றனவே நமது ஊதுகுழல்களும் தலைவர்களும்.......!



# மட்டக்களப்பு- பொலனறுவை வீதியில் பயணிப்பது ஆபத்தை விளைவிக்கும்!

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவிப்பு!!

(அஸ்ஹர் இப்றாஹிம் )

மகாவலி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்தூள்ள நிலையில் மட்டக்களப்பு - பொலனறுவை நெடுஞ்சாலையின் பயணிப்பது ஆபத்தை விளைவிக்கும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

கல்லெல்ல பகுதியால் பயணிப்பது மறு அறிவித்தல் வரும்வரை மூடப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான மழை பெய்து கொண்டிருப்பதால் வீதியால் பரவும் வெள்ள நீரின் அளவும் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வருகிறது. இதனால் ஆபத்தான நிலமை ஏற்படலாம் என்ற அச்சத்தில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

இந்த வீதியைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொது மக்களை கேட்டுள்ளது. அவசரமாக பயணிப்போர் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளது.

# அரச சேவையில் உள்ளோருக்காக கொடுப்பனவுச் சுற்றறிக்கை வந்தது!




வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய, அரச சேவையில் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு வழங்குவது தொடர்பான சுற்றறிக்கையைப் பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன இது தொடர்பான சுற்றறிக்கையை அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு நேற்று (10) அனுப்பி வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய, அரச அதிகாரிகளின் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட வேண்டும் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச்வரை, அரசு ஊழியர் ஒருவருக்கு மாதாந்தம் வழங்கப்படும் 7,800 ரூபா வாழ்க்கைச் செலவு உதவித் தொகையுடன், 5,000 ரூபாய் சேர்த்து 12,800 ரூபாவாக வழங்கப்பட வேண்டும்.

வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி, இந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரையிலான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவின் நிலுவைத் தொகையை, 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை மாதாந்தம் 5,000 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், இந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் விதவைகள் மற்றும் ஆதரவற்றோர் ஓய்வூதிய பங்களிப்பாக அனைத்து அரச ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து 8 வீதம் அறவிடப்படும் என்று மேற்படி சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு பயிற்சி பெறுபவர்கள் மற்றும் பயிற்சியாளர்கள், ஆயுதப்படை உறுப்பினர்கள், சாதாரண தினக்கூலி பணியாளர்கள் மற்றும் அமைச்சர்களின் தனிப்பட்ட ஊழியர்களுக்கும் செல்லுபடியாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2024 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி, ஓய்வு பெற்றவர்களுக்கான தற்போதைய வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு இந்த ஆண்டு ஏப்ரல் முதல் 2,500 ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும் என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஓய்வூதியர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்த வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 3,525 ரூபாவிலிருந்து 6,025 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.








### ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி

# கோர விபத்தில் பரிதாப மரணம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கோர விபத்தில் மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

ஹொறவப்பொத்தானையிலிருந்து அநுராதபுரம் நோக்கி அசுர வேகத்தில் பயணித்த தனியார் பஸ் அதே திசையில் கொழும்பை நோக்கிப் பயணித்த இ.போ. சபை பஸ்ஸை முந்திச் செல்ல முற்படுகையில் எதிரில் வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதுண்டதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று மிகிந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் தனியார் பஸ் சாரதி உட்பட அதில் பயணித்த ஐவர் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மிகிந்தலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


# அனுமதி இன்றி வியாபார நிலையத்தை நடத்திய தமிழருக்கு கனடாவில் அவலம்!



கனடாவில் உரிய அனுமதி இன்றி வியாபார நிலையத்தை நடத்திவந்த ஈழத்தமிழர் ஒருவருக்குக் கனேடிய ஒன்ராறியோ நீதிமன்றம் கடுமையான அபராதத்தை விதித்துள்ளது.

ஈழத்தமிழருக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றுச் சொகுசுமனைகள் விற்பனை செய்வதாகக் கூறி சட்ட விரோதமாக ஐந்து மில்லியன் டொலர் பணத்தைப் பெற்றுக் கொண்டார் எனவும், ஆனால் அடிப்படையில் வீடுமனைகளை நிர்மாணிப்பதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ குறிப்பிட்ட அந்த நிறுவனத்துக்கு உரிய அனுமதி இல்லை என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து, குற்றவாளியாகக் காணப்பட்ட அந்த ஈழத் தமிழருக்குச் சொந்தமான நிறுவனம், கனடா வீட்டு நிர்மாண அதிகார சபைக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் டொலர் அபராதம் செலுத்த வேண்டும் என்றும், சட்ட விரோதமாகப் பெறப்பட்ட 5 மில்லியன் டொலர் பணத்தை உரியவர்களிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.



# உடல் உறுப்புக்களை தானம் செய்யுங்கள்!

### பேராதனை போதனா வைத்தியசாலை தெரிவிப்பு

உடல் உறுப்புக்களைத் தானம் செய்ய முன்வருமாறு பேராதனை போதனா வைத்தியசாலை நிர்வாகம் பொது மக்களிடம் கோரியுள்ளது.

உடல் உறுப்புக்களை தானம் செய்வதால் பல உயிர்களைப் பாதுகாக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழப்போரின் அத்தியாவசியமான உடல் பாகங்களைத் தானம் செய்வதால் அவற்றை வேறு நபர்களுக்குப் பொருத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறுப்பு மாற்றுச் சிகிச்சைகளை மேற்கொள்ளும் விசேட பிரிவொன்று பேராதனை வைத்தியசாலையில் உருவாக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நோய் நிலைமைகளால் உயிரிழப்போரின் உடல் உறுப்புக்களைத் தானம் செய்ய முன்வருமாறு வைத்தியசாலையின் மருத்துவர்கள் கோரியுள்ளனர்.

கல்லீரலைக் கூட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யும் வசதிகள் தறபோது பேராதனை வைத்தியசாலையில் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# அதிகரிக்கப்பட்டுள்ள வரியால் மாணவர்களும் பெரும் பாதிப்பு!

## சாவகச்சேரிப் பிரதேச சபை முன்னாள் உப தவிசாளர் மயூரன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள வற்வரியால் மாணவர்களுடைய கல்வி அடைவு மட்டம் வீழ்ச்சியடைவதுடன் போசாக்கு குறைவான எதிர்கால சந்ததியினர் உருவாகவும் வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் செ.மயூரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஊடகங்களைச் சந்தித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தொடர்ச்சியாக வரியை அதிகரித்து நாட்டின் கடனை அடைக்க முடியும் என்று ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு நினைத்து வருகின்றது.




இந்த 18 சதவீத வரி அதிகரிப்பால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கற்றல் உபகரணங்களுக்கு முழுமையாக 18 சதவீத வரி அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனவரி முதலாம் திகதியே இந்த வரி அதிகரிப்பை வர்த்தகர்கள் செயற்படுத்த ஆரம்பித்து விட்டனர்.


இவ்வாறான சட்டவிரோத மற்றும் மோசடிச் செயற்பாடுகளை நிறுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆடம்பரப் பொருள்களுக்கு வரி அதிகரித்தால் அதனால் பாதிப்பு ஏற்படாது. ஆனால் அத்தியவசியமான பொருள்களுக்கான விலை அதிகரிப்பால் ஏழை மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே அரசு மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு அத்தியவசியப் பொருள்களுக்கு வரிச்சலுகைகளை வழங்கி மக்களுக்கு உதவ வேண்டும் .- என்றார்.



# இலங்கையில் இருந்து விடைபெறும் பாகிஸ்தான் தூதருக்குக் கௌரவம்!



(கே. எ. ஹமீட்)

இலங்கையில் தமது பதவிக் காலத்தை நிறைவு செய்து கொண்டு விடைபெற்றுச் செல்லும் பாகிஸ்தான் தூதர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை சுற்றுலா மற்றும் கைத்தொழில் மன்றத்தின் தலைவர் ஏ .எம் ஜவ்பரின் ஏற்பாட்டில், முஸ்லிம் ஹேண்ட் அமைப்பின் இலங்கை வதிவிட பிரதிநிதி ஏ.எம் மிஹ்லாரின் ஒத்துழைப்புடன் கொழும்பு சினமண்ட் கிராண்ட் விடுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை(9) இந்த நிகழ்வு நடைபெற்றது.

இராப் போசனத்துடன் நடைபெற்ற இந்தப் பிரியாவிடை நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் முக்கிய உரை நிகழ்த்தினார்.

அத்துடன் தூதருக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக்கும் கலந்து கொண்டார்.



# மட்டக்களப்பில் வெள்ள அனர்த்தத்தால் 2 ஆயிரத்து 319 குடும்பங்கள் பாதிப்பு!

## அரச அதிபர் நேரில் சென்று பார்வையிட்டார்

(ந.குகதர்சன்)

மாவட்டத்தில் வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை தொடராக பெய்து வருவதால் மாவட்டத்திலுள்ள குளங்கள், ஆறுகளின் நீர் மட்டம் அதிகரித்த துடன், மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ள நீர் புகுந்துள்ளது.

கிரான், புலி பாய்ந்தகல் மற்றும் கின்னயடி, பிரம்படித்தீவு, ஈரல்குளம், மயிலவட்டுவான், வாகரை, கல்லரிப்பு பகுதிகளுக்குச் செல்லும் பாதை முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் படகு சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

மாவட்டத்தின் கோறளைப்பற்று வடக்கு வாகரையில் 393 குடும்பங்கள், மண்முனை வடக்கு பகுதியில் 33 குடும்பங்கள், களுவாஞ்சிக்குடி பகுதியில் 7 குடும்பங்கள், மண்முனை தென் தென்மேற்கு பட்டிப்பளை பகுதியில் 10 குடும்பங்கள், போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலக பகுதியில் 290 குடும்பங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

காத்தான்குடியில் ஆயிரத்து 498 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 7 குடும்பங்கள் காத்தாங்குடி பதுரியா வித்தியாலயத்திலும், எறாவூர் பற்று செங்கலடி பகுதியில் 88 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் 27 குடும்பங்கள் எறாவூர் - 4 கோயில் மண்டபத்திலும் தங்கியுள்ளனர்.



பிரதேசங்களில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்தது. பிரதான கால்வாய்கள், ஆறுகள், மற்றும் தாழ்நில பிரதேசங்களில் உள்ள மற்றும் போக்குவரத்தில் ஈடுபடும் பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு அரச அதிபர் உள்ளிட்ட குழுவினர் இந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

# சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத கேக் விற்பனை நிலையம் மூடப்பட்டது!

(த.சுபேசன்)

சாவகச்சேரியில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத கேக் விற்பனை நிலையம் ஒன்று சுகாதாரப் பிரிவினரால் மூடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தக நிலையத்தில் பல சுகாதார குறைபாடுகள் காணப்பட்ட நிலையில் அதனை சீர்செய்யுமாறு சுகாதார பகுதியினர் வலியுறுத்தியுள்ளனர்.

இருந்த போதிலும் அதனைப் பொருட்படுத்தாது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் பி.தளர்ராஜ், வர்த்தக நிலையத்தை மூடியுள்ளார்.




வர்த்தக நிலையத்தில் நிலவி வரும் குறைபாடுகளைச் சீர் செய்த பின்னர் வர்த்தக நிலையத்தை திறக்க அனுமதி வழங்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# வெள்ளத்தை தடுக்க அணை அமைக்குக!

## ஆனைவிழுந்தான் குளம் மக்கள் கோரிக்கை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் குளத்தில் இருந்து வெளியேறும் வெள்ளம் கிராமத்திற்குள் வருவதைத் தடுப்பதற்கு தடுப்பணை அமைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1983 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆனைவிழுந்தான் குளம் குடியேற்ற திட்டத்தில் தற்போது 500 வரையிலான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

ஆண்டு தோறும் பெரும் மழை காலத்தில் வன்னேரிக்குளம் அக்கராயன் வீதியை குறுக்கறுத்துப் பாய்கின்ற வெள்ளம் இந்தக் கிராமத்தின் நடுப் பகுதியினூடாகப் பாயும்.

இதனால் இங்கு வாழும் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன.

இந்த நிலையில் வன்னேரிக்குளம் அக்கராயன் வீதியிலிருந்து ஆனை விழுந்தான் குளம்வரை ஒரு சிறு அணையை அமைப்பதன் மூலம் வெள்ளம் வீதியில் பரவாமல் நேரடியாகவே குளத்தைச் சென்றடையும் என்று பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.


தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு
கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டு கழக
ஏற்பாட்டில் DAN TV யின்
அனுசரனையுடன்



வடமராட்சி கிழக்கில்
03வது மாபெரும்
பட்டத் திருவிழா
2024

காலம் : 16.01.2023 (செவ்வாய்கிழமை)
நேரம் : பிற்பகல் 2.00 மணி
இடம் : கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டுக் கழக மைதானம்

தங்களின் கற்பனைத்திறனுக்கு எம் மண்ணில் ஓர் அங்கீகாரம் தமிழரின் பண்பாட்டு கலையை எம்முடன் சேர்ந்து கொண்டாடி பணப்பரிசில்களையும் வெற்றி பெற்று தைபொங்கலை கொண்டாடுங்கள்.



முதலாம் பரிசு 100,000/=
இரண்டாம் பரிசு 50,000/=
மூன்றாம் பரிசு 25,000/=



பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு
உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்
றஜனி : 077 843 5381 தயாபரன் : 077 152 9308
ஏற்பாட்டுக்குழு



# கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதிக்கு கோப்பாய் கலாசாலையில் கௌரவிப்பு

35 ஆண்டுகளாகக் கல்விச் சேவை யாற்றி அரச பணியில் இருந்து ஓய்வு பெறும் யாழ்ப்பாணம் தேசிய கல்வி யியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தத்தின் பணிகளை நயந்து கோப்பாய் ஆசி ரியர் கலாசாலை சமூகம் முன்னெ டுத்த பணி நயப்பு விழா நேற்று (10) கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற் றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌ லீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலாசாலை யின் விரிவுரையாளர்களும் கற்பித்தல் சாரா பணியாளர்களும் ஆசிரிய மாண வர்களும் பீடாதிபதி பரமானந்தத்தின் சேவைகளை நயந்து உரையாற்றி னர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை யின் நூற்றாண்டு செயற்பாடுகளுக்கும் கல்விசார் செயற்பாடுகளுக்கும் கல்வி யியல் கல்லூரி சார்ந்து நல்கிய பங் களிப்புகளுக்காக நன்றி தெரிவித்த துடன் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார்.

கௌரவம் பெற்ற பீடாதிபதி கலா நிதி சு. பரமானந்தம், தான் கலாசாலை யில் பயிற்றப்பட்ட ஆசிரியராக தனது ஆசிரியர் வாண்மையை ஆரம்பித்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் அண் மையில் கலாநிதி பட்டம் பெற்றமை வரைக்கும் தான் மேற்கொண்ட கல்வி சார் விடாமுயற்சிகள் பற்றி கலாசாலை யின் ஆசிரிய மாணவர்களுக்கு எடுத் துக் கூறினார்.
















# மக்களவைத் தேர்தலில் 400 இடங்களில் வெல்வதற்கு பாரதிய ஜனதா வியூகம்!



எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் 400 இடங்களில் வெல்ல பா.ஜ.க. இலக்கு நிர்ணயித்துள்ளது. நாடாளுமன்ற மக்களவை தேர்தலுக்கான அறிவிப்பு அடுத்த மாதம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தேர்தலில் 3 ஆவது முறையாக ஆட்சி அமைக்க பா.ஜ.க. தீவிரமாக உள்ளது. அதேவேளையில், பா.ஜ.காவிடம் இருந்து ஆட்சியை கைப்பற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இண்டியா கூட்டணியை உருவாக்கி உள்ளனர்.

இந்த கூட்டணியின் தலைவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் முதல் கட்டமாக ஆம் ஆத்மி – காங்கிரஸ் இடையே தொகுதிப் பங்கீடு நடந்து முடிந்துள்ளது. ஏனைய எதிர்க் கட்சிகளும் விரைவில் தொகுதிப் பங்கீடு குறித்து பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், தேர்தலுக்கான உத்திகள் குறித்த முக்கிய கூட்டம் ஒன்றை பா.ஜ.க. கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தியது. இதில் பா.ஜ.கவின் பல்வேறு பொதுச் செயலாளர்களுக்கும் பல்வேறு பொறுப்புகளை கட்சியின் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா வழங்கினார். வினோத் தாவ்டே என்ற பொதுச் செயலாளருக்கு இணைப்புக் குழு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கையில்,

"ஏனைய கட்சிகளில் இருந்து செல்வாக்கு மிக்க தலைவர்கள் மற்றும் தற்போதைய எம்.பி.க்களை பா.ஜ.கவுக்கு கொண்டு வருவது குறித்து இணைப்புக் குழு ஆராயும். தொகுதியில் அந்த நபருக்கு இருக்கும் செல்வாக்கு மற்றும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அவருக்குள்ள திறன் ஆகியவற்றின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும்.

பா.ஜ.க. வேட்பாளர் வெற்றிபெற வாய்ப்பில்லை என்று கருதப்படும் இடங்களில் மட்டும் கட்சி இதனை ஆராயும். கடந்த தேர்தலில் இழந்த 160 இடங்களில் கட்சி கவனம் செலுத்தி வருவதற்கும் இந்த முடிவுக்கும் தொடர்பு உள்ளது." என்று தெரிவித்துள்ளன.

# மக்களின் அமைதிக்கு குந்தகம்: அண்ணாமலை மீது வழக்கு தாக்கல்



தமிழ் நாட்டின் பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை மீது 3 பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

'என் மண், என் மக்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபயணம் மேற்கொண்ட அண்ணாமலை கடந்த 8 ஆம் திகதி தர்மபுரி மாவட்டத்தில் பள்ளிப்பட்டியில் உள்ள லூர்து அன்னை மாதா ஆலயத்திற்கு வழிபட சென்ற போது இளைஞர்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

மணிப்பூர் கலவரம் தொடர்பாக அண்ணாமலையிடம் கேள்வி எழுப்பட்ட போது, அது இரு பிரிவினர் இடையே ஏற்பட்ட தகராறு என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என பதிலளித்திருந்தார்.

தொடர்ந்தும் ஆலயத்திற்குள் செல்ல கூடாது என வாக்குவாதத்தில் இளைஞர்கள் ஈடுபடவே பொலிஸாரின் தலையீட்டின் பின்னர் அண்ணாமலை வழிபாட்டில் ஈடுபட்டார். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், பொது அமைதிக்கு இடையூறு விளைவித்ததாக தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மீது பொம்மிடி பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

பொம்மிடி பொலிஸ் நிலையத்தில் கார்த்திக் என்பவர் முறைப்பாடு செய்துள்ளார். இதற்கமைய, அண்ணா மலை மீது 3 பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஈக்வடாரில் பெரும் கலவரம்: 2 மாதங்களுக்கு அவசரநிலை



தென் அமெரிக்க நாடான ஈக்வடாரில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் கடத்தல் குற்றவாளி ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இந்த நிலையில், அவர் இறந்துவிட்டார் என கருதி அவரது ஆதரவாளர்கள் கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை அடுத்து அந்த நாட்டு ஜனாதிபதி டேனியல் நோபோவா, இரண்டுமாதங்களுக்குஅவசரநிலையை பிரகடனப்படுத்தியுள்ளார்.

குவாயாகில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த குற்றவாளி அடோல்போ மசியாஸ் என்பவர் காணாமல் போனாரா அல்லது தப்பிச் சென்றாரா என்ற விவரம் தெரியாத நிலையில், சிறைச்சாலைகளில் கலவரம் வெடித்துள்ளது.

இந்த நிலையில், தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றில் நேரலை செய்திகளை ஒளிபரப்பிக் கொண்டிருந்த அரங்குக்குள் நுழைந்த முகமூடி அணிந்த கும்பல், ஊழியர்களை துப்பாக்கி முனையில் பணயக் கைதிகளாகப் பிடித்தது.

அப்போது ஊழியர்கள் சுடாதீர்கள் என்று கெஞ்சும் காணொலியும் இணையத்தில் வெளியாகி உள்ளது. இதனிடையே, நிலைமை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டதாக ஈக்வடார் அரசு கூறியுள்ளது.

இதேவேளை தொலைகாட்சி நிலையத்திற்குள் நுழைந்த கும்பலை கைது செய்ததாகவும் அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பப்புவா நியூ கினியாவில் வன்முறை: உயிரிழப்புக்கள் 15 ஆக அதிகரிப்பு

பப்புவா நியூ கினியாவின் இரு முக்கிய நகர்ங்களில் நேற்றைய தினம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டின் தலை நகர் மோர்ஸ்பி, மற்றும் லே ஆகிய இரு நகராங்களிலேயே இந்த வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன எனவும் மோர்ஸ்பி நகரில் 8 பேரும், லே நகரில் 7 பேரும் கொல்லப்பட்டுள்ளர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனினும், இந்த வன்முறைச் சம்ப வங்களுக்கான காரணம் என்ன? என்பது குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

இந்த நிலையில் இது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மீண்டும் கொரோனா: ஸ்பெயினில் முகக் கவசம் கட்டாயம்

காய்ச்சல், கொவிட் மற்றும் பிற சுவாச நோய்கள் அதிகரித்து வருவதால், புதன்கிழமை முதல் ஸ்பெயினில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மையங்களில் முகக் கவசங்கள் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சுகாதார வசதிகள் மற்றும் மருந்தகங்களில் முகக்கவசங்களின் பயன்பாடு கட்டாயமாக நிறுத்தப்பட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு எடுக்கப்பட்ட அரசாங்க முடிவுகள், சில பிராந்திய நிர்வாகங்களின் எதிர்ப்பை எதிர் கொண்டது.

ஆனால் ஸ்பெயினின் புதிய சுகாதார அமைச்சர் மோனிகா கார்சியா அவர்களின் ஆட்சேபனைகளை நிராகரித்து, இந்த நடவடிக்கையை "பொது வான நடவடிக்கையாக" முன்வைத் துள்ளார்.

திங்களன்று பிராந்திய சுகாதார அதிகாரிகளின் கூட்டத்திற்குப் பிறகு, "நாங்கள் பேசினோம், முககவசங்களின் பங்கைப் பற்றி ஆழமாகப் பிரதிபலித்துள்ளோம் – குறிப்பாக சுகாதார மையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் – நோயாளிகள் மற்றும் சுகாதார நிபுணர்கள் இருவரையும் பாதுகாக்கும் வகையில் கலந்துரையாடினோம்," என்று அவர் கூறினார்.



# கற்றல் உபகரணம் வழங்கல்

(எம்.எப்.நவாஸ்)

2023 ஆம் கல்வி ஆண்டின் மூன்றாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாவதை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபிர்யால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம். கஸ்பியா, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ் .சியாத், மகளிர் அபிவிருத்திகள உத்தியோகத்தர் எஸ்.ஏ.எம்.எஸ். பர்ஹானா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.மனாப் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன





(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இந்தப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்கள் அண்மையில் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் பெண் தலைமை தாங்கும் 10 குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதில் சிறு கடை,கோழி வளர்ப்புக்கான உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட மகளிர் சங்க உறுப்பினர்களுக்கு கோழிக்கூடு, கோழித்தீன், கோழி மருந்துகள் மற்றும் நாட்டுக் கோழிகளும் வழங்கப்பட்டன.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அதன் மூலம் நாளாந்தம் தங்களது ஜீவனாம்சத்தை கொண்டு செல்லவும் இந்தத் திட்டம் நடை முறைப்படுத்தப்படுகிறது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், கணக்காளர் எஸ்.செல்வதாஸ், நிர்வாக உத்தியோகத்தர் உடகெதர, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பாமினி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



(ந.குகதர்சன்)

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் கீழுள்ள பகுதிகளைக் கண்காணிக்கப்பட்டு டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அ.உதயசூரியா தலைமையில் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபய விக்கிரம, பொது சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் ஒன்றிணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது இந்தக் குழு வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அடையாளம் கண்டு பொது மக்களின் உதவியுடன் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

தேங்கி நிற்கும் வெள்ள நீரையும் வாய்க்கால் வெட்டி வெளியேற்றுவதற்கு உரிய ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில் டெங்கு நுளம்பு பெருகும் சூழலை வைத்திருந்தோர் இன்போது அடையாளம் காணப்பட்டு அவர்கள் எச்சரிக்கப்பட்டனர். ஒலி பெருக்கி மூலமும் மக்களுக்கு டெங்கு தொடர்பாக அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.





# அனர்த்த முகாமைத்துவ குழுவை தயார்படுத்துதல் பற்றி கலந்தாய்வு

(அஸ்ஹர் இப்றாஹிம், நூருல் ஹுதா உமர்)

அடை மழை காரணமாக தாழ் நிலப் பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன் மேலும் சில இடங்களில் வெள்ள அனர்த்தமும் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்தும் கடும் மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும் பொது மக்களை அவதானத்துடன் செயற்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் ஆகியன அறிவித்துள்ளன.

இந்த நிலையில் வெள்ள அனர்த்தத்தில் இருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டும், அனர்த்தத்தில் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்கும் பொருட்டும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனர்த்த முகாமைத்துவக் குழு அவசரமாக ஒன்று கூடியது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற ஒன்று கூடலில் பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

கல்முனை பிராந்தியத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களூடாக அனர்த்தம் தொடர்பாக மக்களை விழிப்பூட்டுதல், வைத்திய சாலைகள் உள்ளிட்ட பிராந்திய சுகாதார நிறுவனங்களில் உள்ள அனர்த்த முகாமைத்துவ குழுக்களை ஒழுங்குபடுத்தி தயார் நிலையில் வைத்துக் கொள்ளல்,

அனர்த்த நிலைமைகளின் போது அதற்கு முகம் கொடுப்பது தொடர்பாகவும் மக்களின் பாதுகாப்பு நலன் கருதியும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல், வெள்ள நீரால் ஏற்படக் கூடிய தொற்று நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வகையில் முறையான வேலைத் திட்டங்களை மேற்கொள்ளல், அனர்த்தத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கும் பொருட்டு மருத்துவ முகாம்களை நடத்துதல், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனர்த்த முகாமைத்துவக் குழு இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌஸாத் ஊடாக அனர்த்த பாதுகாப்பு தொடர்பான விடயங்களை முன்னெடுத்தல் என பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.





# கல்முனையில் இரத்ததானம்!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வழிகாட்டலின் கீழ் மருதமுனை ஷம்ஸ் 97 சமூக சேவைகள் அமைப்பு, ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத் மருதமுனை கிளையுடன் இணைந்து மாபெரும் இரத்ததான முகாம் ஒன்றை நடத்தியுள்ளன.

ஷம்ஸ் 97 சமூக அமைப்பின் தலைவர் ஐ.ஹுமாயூன் தலைமையில் கல்முனை அல்-மதீனா வித்தியாலத்தில் இரத்ததானம் இடம்பெற்றது.

உதிரம் கொடுத்து உயிர் காப்போம் என்பதற்கு அமைவாக மருதமுனையில் சில வருடங்களாக இயங்கிவரும் ஷம்ஸ் 97 சமூக சேவைகள் அமைப்பானது திடீர் விபத்துக்கள், சத்திர சிகிச்சைகளுக்கான அவசர தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கல்முனை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியில் நிலவுகின்ற இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

அமைப்பின் செயலாளர் ஏ.எச்.அல் ஜவாஹிர் முதலாவது நபராக இரத்த தானம் செய்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அமைப்பின் செயலாளர் ஏ.எச்.அல் ஜவாஹிர் நெறிப்படுத்தல் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில், கல்முனை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியின் பொறுப்பு வைத்திய அதிகாரி க.ஹிரிஸ்சானந், வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள், சமூக அமைப்பின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கொண்டனர்.

# வெருகல் பிரதேச மக்களுக்கு பெரேண்டினா நிறுவனம் உதவி



(அப்துல்சலாம் யாசீம் )

திருகோணமலை வெருகல் பிரதேச செயலகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நான்கு கிராம சேவகர் பிரிவை சேர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் பெரேண்டினா நிறுவனம் வழங்கியுள்ளது.

வெருகல் பிரதேச செயலாளர் எம். ஏ. அனஸ் தலைமையில் நேற்று முன்தினம் (09) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன.

வெருகல், வெருகல் முகத்துவாரம், ஆனைத்தீவு, இலங்கைதுறை முகத்துவாரம் போன்ற நான்கு கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 321 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

# ஊடகவியலாளருக்குத் தென்னங்கன்றுகள்

(எஸ்.கீதபொன்கலன்)

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் திருகோணமலை பிராந்திய முகாமையாளரால் திருகோண-மலை ஊடகவியலாளர்களுக்கு நேற்று முன்தினம் (9) தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை கந்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வேண்டுகோளை ஏற்று அதன் அங்கத்தவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

ஒருவருக்கு 4 என்ற எண்ணிக்கையில் தென்னங்கன்றுகள் பிராந்திய முகாமையாளர் சுமித் பண்டார வால் திருகோணமலை கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

